

புதுச்சேரி மாநில திட்டக்குழு கூட்டம் கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற போது எடுத்த படம். அருகில் முதல்–அமைச்சர் ரங்கசாமி உள்ளார்.

அடுத்த மாதம் தாக்கல் செய்யப்படுகிறது:

# புதுச்சேரி பட்ஜெட் திட்ட மதிப்பீடு ரூ.12,700 கோடி

## கவர்னர் தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவு

புதுச்சேரி, ஜூன்.19-

புதுச்சேரியில் 2024-25ம் நிதியாண்டில் ரூ.12,700 கோடியில் பட்ஜெட் தாக்கல் செய்ய கவர்னர் தலைமையில் நடந்த திட்டக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

### ஜூலை மாதம் பட்ஜெட்

புதுச்சேரியில் கடந்த 2021-ம் ஆண்டு முதல்–அமைச்சர் ரங்கசாமி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த நிதியாண்டில் முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையில் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு நடப்பு நிதியாண்டில் முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்ய முடியாத சூழல் ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து கடந்த பிப்ரவரி மாதம் 22-ந்தேதி 5 மாத செலவினங்களுக்கு ரூ.4 ஆயிரத்து 634 கோடிக்கு இடைக்கால பட்ஜெட்டை முதல்–அமைச்சர் ரங்கசாமி தாக்கல் செய்தார். தொடர்ந்து முழுமையான பட்ஜெட்டை அடுத்த மாதம் (ஜூலை) இறுதியில் தாக்கல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### திட்டக்குழு கூட்டம்

இதனை தொடர்ந்து நேற்று காலை தலைமை செயலகத்தில் உள்ள கருத்தரங்கு கூடத்தில் திட்டக்குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். முதல்-அமைச்சர் ரங்கசாமி, அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமி நாராயணன், தேனீ.ஜெயக்குமார், சாய் சரவணன்குமார், திருமுருகன், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் சிவா மற்றும் அரசுதுறை செயலாளர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தை தலைமைசெயலாளர் சரத் சவுகான் தொடங்கி வைத்து பேசினார். தொடர்ந்து நிதித்துறை செயலாளர் ஆஷிஷ் மாதவ்ராவ் மோரே கலந்து கொண்டு 2024-25ம் ஆண்டுக்கான பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள் குறித்து பேசினார். தொடர்ந்து பட்ஜெட்டில் இடம் பெற வேண்டிய புதிய திட்டங்கள், துறைரீதியான நிதி ஒதுக்கீடு குறித்து விவாதிக்கப்பட்டது.

### திட்ட மதிப்பீடு ரூ.12,700 கோடி

அதன் பின்னர் முதல்–அமைச்சர் ரங்கசாமி, கவர்னர் சி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோர் நிதி ஒதுக்கீடு, பட்ஜெட்டில் செயல்படுத்த வேண்டிய முக்கிய திட்டங்கள், அதற்கு தேவைப்படும் நிதி குறித்து பேசினர்.

இந்த கூட்டத்தில் ரூ.12,700 கோடி மதிப்பில் பட்ஜெட் தாக்கல் செய்வது எனவும், மேலும் அதை மத்திய அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெறவும் முடிவு செய்யப்பட்டது. கூட்டத்தின் முடிவில் திட்டக்குழு செயலாளர் முத்தம்மா நன்றி கூறினார்.

தொடர்ந்து கவர்னர் சி.பி. ராதாகிருஷ்ணன் நிருபர்களிடம் கூறியதாவது:-

### எழுச்சிமிகு புதுச்சேரி

எழுச்சிமிகு புதுச்சேரியை உருவாக்க வேண்டும் என்பதுதான் இந்த கூட்டத்தின் முதல் நோக்கமாகும். இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர்கள், அதிகாரிகள் மாநில முன்னேற்றத்திற்கு தேவையான கருத்துகளை தெரிவித்துள்ளனர். அவர்கள் கூறிய ஆலோசனைகளை ஏற்று அமல்படுத்த முடிவு எடுத்துள்ளோம். எழுச்சிமிகு புதுச்சேரி வெறும் கோஷமாக இல்லாமல், நடைமுறையிலும் வெற்றிகரமாக மாறும்.

புதுவையில் ரூ.12 ஆயிரத்து 700 கோடியில் பட்ஜெட் தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளோம். இதை எவ்வாறு மேலும் உயர்த்தலாம் என்று ஆலோசனைகள் நடத்தி வருகிறோம். புதுச்சேரி முன்னேற்றத்தில், ஒரு புதிய எழுச்சியை காணப்போகிறது. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால பட்ஜெட்டின் தொடர்ச்சிதான் இது.

### இலவச அரிசி

புதுச்சேரியில் ரேஷன் கடைகளை மீண்டும் திறந்து அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்குவது குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. பொதுமக்கள் தெரிவித்த விருப்பத்தை அறிந்து அதற்கு ஏற்ப இந்த திட்டம் செயல்படுத்தப்படும். நீட் தேர்வு வேண்டாம் என்று கூறுபவர்கள்

இது தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டிற்குதான் செல்ல வேண்டும். கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் அறிவித்த திட்டங்களை (சம்பள உயர்வு) விரைந்து செயல்படுத்த முனைப்பு காட்டப்படும். மத்திய அரசிடம் இருந்து புதுவை மாநில வளர்ச்சிக்கு கூடுதல் நிதிஉதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு கவர்னர் சி.பி. ராதாகிருஷ்ணன் கூறினார்.

திட்டக்குழுவில் முடிவு செய்துள்ள பட்ஜெட் நிதி குறித்து மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும். ஒப்புதல் கிடைத்த பிறகு, புதுவை சட்டசபையில் ஜூலை மாதம் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும்.